**O.S. No. 98/2025**
**Date : 27.03.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW. 2 **திரு. சிவபாண்டியன்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எனது சொந்த ஊர் கூடலூர். எனது தொழில் விவசாயம். நெல் வயல் வைத்து விவசாயம் செய்து வருகிறேன். வாதி ரஷியழகன் எனக்கு அண்ணன் முறை என்ற வகையில் எனக்கு அவர் பழக்கம். எனக்கு அவர் பங்காளி முறை, ரத்த சொந்தம் கிடையாது. எனக்கு பிரதிவாதியை தெரியும். அவர் ஹோட்டல் தொழில் செய்து வருகிறார். எனது வீட்டிலிருந்து சுமார் 200 மீட்டர் தூரத்தில் அவர் ஹோட்டல் வைத்து நடத்தி வருகிறார். எனக்கு பிரதிவாதி உறவினர் கிடையாது.

2. வாதியும், பிரதிவாதியும் உறவினர் என்ற விபரம் எனக்கு தெரியும். அவர்கள் இருவரும் ரத்த சொந்தமான உறவு என்ற விபரம் எனக்கு தெரியும். வாதியின் தங்கை மற்றும் அவரது கணவரை எனக்கு தெரியும். அவரது தங்கையின் க/பெ. முருகன். SM முருகன் என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. அவர் பெயர் முருகன் தான். முருகனும் விவசாய தொழில் செய்து வருகிறார். அவரை எனக்கு தெரியும். எனது அண்ணனின் நண்பர் என்ற வகையில் அவரை எனக்கு தெரியும். எனது அண்ணன் பெயர் ஜெகன். அவரது பெயர் ராஜராஜன் (எ) ஜெகன் என்றால் சரிதான்.

3. முருகன் பட்டதாரி மற்றும் ஆசிரியர் என்றால் சரிதான். அவர் விவசாயம் செய்து வருவதாக ஆசிரியர் என்ற விபரத்தை மறைத்து குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. முருகன் வேறு எந்த கட்சியிலோ, பொறுப்பிலோ கிடையாது. இதற்கு முன்பும் அவர் எந்த பொறுப்பிலும் இல்லை. SM முருகன் என்பவர் கே.ஜி. பட்டியில் இதற்கு முன்பு துணை சேர்மனாக இருந்துள்ளார் என்றால் அது பற்றி

விவரம் எனக்கு தெரியாது. சதீஷ்குமார் என்ற போலீஸ் எனக்கு நண்பர் தான், அண்ணன் முறை.

4. எனக்கு உள்ள விவசாய நிலங்கள் குறித்த ஆவணங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். எனது தொழில் பைனான்ஸ் தொழில் என்றால் சரியல்ல. நான், முருகன், ராஜராஜன், சதீஷ்குமார் மற்றும் சிலர் சேர்ந்து பைனான்ஸ் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. எங்கள் பைனான்ஸ் தொழில் நடைபெறும் இடம் கூடலூர் மெயின் பஜாரில் உள்ளது என்றால் சரியல்ல. கூடலூர் லட்சுமி ஜெராக்ஸ் கடைக்கு எதிரில் எனது பைனான்ஸ் கடை உள்ளது என்றால் சரியல்ல.

5. வழக்கிற்காக வேண்டுமென்றே நான் பைனான்ஸ் தொழில் செய்யவில்லை என்றும், அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 10.10.2024 ஆம் தேதியன்று புரோநோட் மதியம் 12.00 மணிக்கு புரோநோட் எழுதப்பட்டது. அந்த சமயத்தில் நான் மானூத்து மண்டபத்தில் இருந்தேன். மானூத்து மண்டபம் என்பது கோட்டை கருப்புசாமி கோயிலுக்கு அருகில் உள்ளது. அவை இரண்டும் எந்த வார்டில் அமைந்துள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. கோட்டை கருப்புசாமி கோயில் மற்றும் மானூத்து மண்டபம் இரண்டும் 4–வது வார்டை சேர்ந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

6. புரோநோட் வாதி ரஷியழகன் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. அவர் வீடு மண்டபத்திலிருந்து தெற்கு பக்கம் அமைந்துள்ளது. அவர் வீடு அமைந்துள்ள வார்டு சர்ச் தெருவை சேர்ந்தது. சர்ச் தெரு 5 வது வார்டு என்றால் ஓடை தெருவுக்கு பக்கத்தில் அவர் வீடு அமைந்துள்ளது. அது 5 வது வார்டை சேர்ந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. அன்றைய தினம் என்ன கிழமை என்று எனக்கு தெரியாது. அந்த இடத்தில் எப்போதும் கூட்டமாக இருப்பார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அன்றைய தினம் கூட்டம் எதுவும் இல்லை விசேஷ நாட்களில் மட்டுமே மண்டபத்தில் கூட்டம் இருக்கும்.

7. ரஷியழகன் மற்றும் செல்வி இருவரும் தான் என்னை புரோநோட்டுக்காக சாட்சி கையெழுத்து போட அழைத்தார்கள். இரண்டு பேருமே

என்னை அழைத்தார்கள். என்னையும், பாண்டியன் என்பவரையும் அழைத்தார்கள். பத்திர எழுத்தர் முத்துராஜ் என்பவரையும் அழைத்தார்கள். ரஷியழகன் குடியிருந்ததாக சொல்லும் வீடு அவரது ஒத்தி வீடு, அவரது சொந்த வீடு என்பது மானூத்து மண்டபத்திலிருந்து வடக்கில் அமைந்துள்ளது.

8. நான் இந்த வழக்கின் பிராதினைப் படித்துப் பார்த்தேன். புரோநோட் தயார் செய்து கையெழுத்து வாங்கும்போது ரஷியழகனின் உறவினர்கள் வேறு யாரும் அங்கு இல்லையா என்றால் வேறு யாரும் இல்லை. பிரதிவாதி தரப்பிலும் வேறு யாரும் அங்கு இல்லை. செல்வி ரஷியழகனிடம் தனது காலி மனையின் ஆவணத்தை கொடுத்தார், செல்வி 3 புரோநோட்டுகள் எழுதிக் கொடுத்தார். அதல்லாமல் 4 புரோநோட்டுகள் செல்வி எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. 3 புரோநோட்டுகள் தான் எழுதிக் கொடுத்தார்.

9. 4 புரோநோட்டுகளும் முருகனுக்கு தான் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆவணம் தயார் செய்யும் பொழுது நான், பாண்டியன், முத்துராஜ் மூன்று பேரும் இருந்தோம். வாதி மற்றும் பிரதிவாதியும் இருந்தார்கள். ஆவணங்களை நான், முருகன், முத்துராஜ், பாண்டியன் ஆகிய நால்வரும் தான் தயார் செய்தோம் என்றால் சரியல்ல. 500 ரூபாய் நோட்டுகள் 60 கட்டுக்களாக பணமாக கொடுக்கப்பட்டது. 10.10.2024 ஆம் தேதியன்று 10, 10, 10 லட்சமாக கொடுக்கப்பட்டது என்று வழக்கில் சொல்லப்பட்டுள்ளது என்றால், பத்து, பத்து, பத்து லட்சங்களாக மூன்று புரோநோட்டுகளுக்கு ரூ.30 லட்சம் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது.

10. புரோநோட்டில் முதலில் கையெழுத்து செய்தது செல்வி. புரோநோட்டில் நான் முதலில் கையெழுத்து செய்ததாக முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல, செல்வி முதலில் கையெழுத்து போட்ட பிறகு நான் அடுத்த கையெழுத்து போட்டேன். சாட்சியாக முதல் கையெழுத்து போட்டதாக சொல்லியுள்ளேன் எனக்கு சாட்சி பாண்டியனை தெரியும், அவர் எனக்கு பங்காளி முறை. அவர் பிரஸ் கடை கம்பத்தில் வைத்துள்ளார். நானும், அவரும் அடிக்கடி சந்தித்துக் கொள்வோம் என்றால் சரிதான்.

11. பாண்டியன் 2வது சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார். கிருஷ்ணமூர்த்தி மகன் முத்துராஜ் என்பவர் பத்திரம் எழுதும் நபர் என்றால் சரிதான். அவர் கூடலூர் போஸ்ட் ஆபீஸ்–க்கு எதிரில் ஆவண எழுத்தர் அலுவலகம் அமைத்துள்ளார் என்றால் சரிதான். நாங்கள் செய்துவரும் பைனான்ஸ் தொழிலுக்கு கையிருப்பு சாட்சியாக எப்போதும் முத்துராஜை பயன்படுத்தி வந்தோம் என்றால் சரியல்ல. இதுபோல் பல வழக்குகளில் முத்துராஜ் எங்களுக்காக சாட்சியமளித்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த ஆவணங்களை தயார் செய்தது முத்துராஜ் தான்.

12. நான், முத்துராஜ் மற்றும் பாண்டியன் மூவரும் இருக்கும்போது தான் பணம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். செல்வியின் உறவினருக்கு செல்விக்கு பணம் கொடுத்த விபரத்தை தெரியப்படுத்தினோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரஷியழகன் வீட்டிற்கும்,, எனது வீட்டிற்கும் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் சொன்னது மாதிரி சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து நிகழ்வு நடைபெறவில்லை என்றும், நான் மிகைப்படுத்தி பிரதிவாதியிடமிருந்து அதிகமாக பணம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் ரஷியழகன் மைத்துனர் முருகன் என்பவரது தூண்டுதலின் பேரில் நீதிமன்றத்தில் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புரோநோட் போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.27 16:31:08 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.